# திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில்

# போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி






வேலூர் மாவட்டம் காட்பாடியில் அமைந்துள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் இன்று 9.11.2024 போதை ஒழிப்பு விழிப்புணர்வுக்காக வேண்டி பேரணி நடத்தப்பட்டது. பேரணியை திருவள்ளுவர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக யுத் ரெட் கிராஸ்இணைந்து இப்பேரணியை நடத்தியது. பேரணியை பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஜெ.செந்தில் வேல்முருகன் உறுதிமொழி எடுத்துத் தொடங்கி வைத்தார்.இதில் பல்கலைக்கழக மாணவர்கள் திரளாகப் பங்கு எடுத்து போதை ஒழிப்பு உறுதிமொழி எடுத்தனர். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ம.செந்தில்குமார், கலைமுருகன், மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர். இதில் மாணவர்கள் போதை ஒழிப்பு வாசகத்தை உச்சரித்துக் கொண்டு பேரணி மேற்கொண்டனர்

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.விஜய் ஆனந்த் மற்றும் யுத் ரெட்கிராஸ் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. நா.சிவகுரு மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் திரு கண்ணதாசன், திரு.தனசேகரன், முனைவர் தமிழினி ஆகியோர் முன்னின்று செய்தனர்.